**சுருக்கம்**

திருவள்ளூர் மாவட்டம்– பொன்னேரி, திருநின்றவூர், கடலூர் மாவட்டம்–திட்டக்குடி, வடலூர், தஞ்சாவூர் மாவட்டம்– அதிராம்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர், கோயம்புத்துரர் மாவட்டம்– கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர் மற்றும் மதுக்கரை, கரூர் மாவட்டம் – பள்ளப்பட்டி மற்றும் திருப்பூர் மாவட்டம் – திருமுருகன்பூண்டி ஆகிய 12 பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்குதல் – உத்தேச முடிவு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண். 81** **நாள்: 14.10.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ, புரட்டாசி–28**
**படிக்கப்பட்டது:**

(1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.2196 /2021/பேரூ.3, நாள். 28.08.2021

(2) திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.1792/2021–1/அ1, நாள்.01.09.2021.

(3) தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.4002/2021/ப.1, நாள்.03.09.2021.

(4) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.1054/2021/பே.3, நாள்.20.09.2021.

(5) திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண். 2252/2021/அ1, நாள்.21.09.2021.

(6) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண். 2066/2021/பேரூ.2, நாள். 22.09.2021.

(7) கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண். 2199/2021/ பேரூ.1, நாள்.23.09.2021.

(8) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.20782/2021/மாநஅ–1, நாள் 27.09.2021

******

**ஆணை :**

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021–22 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

"2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021 ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து

தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது.".

2. இதன்படி, கீழ்காணும் 12 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | வ. எண். | பேரூராட்சி |
|---|---|---|
| திருவள்ளூர் மாவட்டம் | 1. | பொன்னேரி |
| | 2. | திருநின்றவூர் |
| கடலூர் மாவட்டம் | 3. | திட்டக்குடி |
| | 4. | வடலூர் |
| தஞ்சாவூர் மாவட்டம் | 5. | அதிராம்பட்டினம் |
| தூத்துக்குடி மாவட்டம் | 6. | திருச்செந்தூர் |
| கோயம்புத்தூர் மாவட்டம் | 7. | கருமத்தம்பட்டி |
| | 8. | காரமடை |
| | 9. | கூடலூர் |
| | 10. | மதுக்கரை |
| கரூர் மாவட்டம் | 11. | பள்ளப்பட்டி |
| திருப்பூர் மாவட்டம் | 12. | திருமுருகன்பூண்டி |

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட தமது செயற்குறிப்பில், இவ்வறிவிப்பின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள செயற்குறிப்புகளை பரிந்துரை செய்து அரசுக்கு மேலனுப்பிவைத்துள்ளார். சம்பந்தப்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் இதற்கான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்களையும் அனுப்பிவைத்துள்ளார்.

4. மேற்படி செயற்குறிப்புகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:–

**(i) திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரி பேரூராட்சி**

பொன்னேரி தேர்வுநிலை பேரூராட்சி 8.04 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 31,025 மக்கள் தொகையும் தற்போதைய நிலையில் தோராயமாக 36,398 மக்கள் தொகையும் 2018–19, 2019–20 மற்றும் 2020–21 ஆகிய கடந்த மூன்றாண்டுகளுக்கான ஆண்டு சராசரி வருமானம் ரூ.716.73 இலட்சம் கொண்டுள்ளதாகவும் தனி அலுவலரின் 27.08.2021–ஆம் நாளிட்ட தீர்மானம் எண்.511–ல் பொன்னேரி தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர்

தெரிவித்துள்ளார். மேலும், பொன்னேரி தேர்வுநிலை பேரூராட்சிக்கு அருகில் உள்ள மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தடம்பெரும்பாக்கம் ஊராட்சியின் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளின் வருமானம் முறையே ரூ.53.51 இலட்சம் மற்றும் ரூ. 38.71 இலட்சம் உள்ளதாகவும், கொடூர் ஊராட்சியின் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளின் வருமானம் முறையே ரூ.19.00 இலட்சம் மற்றும் ரூ.16.00 இலட்சமாக உள்ளதாகவும், தடம்பெரும்பாக்கம் மற்றும் கொடூர் ஆகிய கிராம ஊராட்சிகள் வளர்ச்சியடைந்த ஊராட்சிகளாக உள்ளதாகவும், எனவே, இவ்வூராட்சிகளையும் பொன்னேரி தேர்வுநிலை பேரூராட்சியுடன் இணைத்து நகராட்சியாக தரம் உயர்த்தலாம் எனவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இக்கிராம ஊராட்சிகளை தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்படவுள்ள பொன்னேரி நகராட்சி உடன் இணைப்பதற்கு ஒப்புதல் வழங்கி தடம்பெரும்பாக்கம் ஊராட்சி மன்றமும் (தீர்மானம் எண்.47 நாள்.31.08.2021) மற்றும் கொடூர் ஊராட்சி மன்றமும் (தீர்மானம் எண்.68 நாள்.31.08.2021) தீர்மானம் இயற்றியுள்ளதாகவும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**(ii) திருவள்ளூர் மாவட்டம் – திருநின்றவூர் பேரூராட்சி**

திருநின்றவூர் சிறப்புநிலை பேரூராட்சி 11.00 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 37,095 மக்கள் தொகையும் தற்போதைய நிலையில் தோராயமாக 44,514 மக்கள் தொகையும் கொண்டுள்ளதாகவும் 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆகிய கடந்த மூன்றாண்டுகளுக்கான ஆண்டு சாரசரி வருமானம் ரூ.877.96 இலட்சம் கொண்டுள்ளதாகவும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். திருநின்றவூர் சிறப்புநிலை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த தனி அலுவலரால் 27.08.2021-ஆம் நாளிட்ட தீர்மானம் எண் 88-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், திருநின்றவூர் சிறப்புநிலை பேரூராட்சிக்கு அருகில் உள்ள பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நடுக்குத்தகை ஊராட்சி 1.67 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும் எனவும், 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இவ்வூராட்சியின் மக்கள் தொகை 9,251 எனவும், தற்போதைய நிலையில் தோரயமாக 10,916 மக்கள் தொகை கொண்டுள்ளதாகவும், சரசாரி ஆண்டு வருமானம் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.43.16 இலட்சமாக உள்ளதாகவும், அதேபோன்று நெமிலிச்சேரி ஊராட்சி 1.177 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 5,743 மக்கள் தொகையும், தற்போதைய நிலையில் 8,936 மக்கள் தொகை கொண்டுள்ளதாகவும், சரசாரி ஆண்டு வருமானம் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.37.99 இலட்சமாக உள்ளதாகவும், நடுக்குத்தகை மற்றும் நெமிலிச்சேரி ஆகிய கிராம ஊராட்சிகள் வளர்ச்சியடைந்த ஊராட்சிகளாக உள்ளதாகவும், எனவே, இவ்வூராட்சிகளையும் திருநின்றவூர் சிறப்புநிலை பேரூராட்சியுடன் இணைத்து நகராட்சியாக தரம் உயர்த்தலாம் எனவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இக்கிராம ஊராட்சிகளை தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்படவுள்ள திருநின்றவூர் நகராட்சி உடன் இணைப்பதற்கு ஒப்புதல் வழங்கி நடுக்குத்தகை ஊராட்சி மன்றமும் (தீர்மானம் எண்.120 நாள்.27.08.2021) மற்றும் நெமிலிச்சேரி ஊராட்சி மன்றமும் (தீர்மானம் எண்.66 நாள்.27.08.2021) இயற்றியுள்ளதாகவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**(iii) கடலூர் மாவட்டம் – திட்டக்குடி பேரூராட்சி**

திட்டக்குடி பேரூராட்சியின் மொத்த பரப்பளவு 14.75 சதுர கிலோ மீட்டர் ஆகவும், 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 22,891 ஆகவும், தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 35,597 ஆகவும் உள்ளதாக கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், இப்பேரூராட்சியின் 2018-2019, 2019-2020

மற்றும் 2020–2021 ஆகிய மூன்று வருடங்களுக்கான ஆண்டு சராசரி வருமானம் ரூ.549.30 இலட்சம் எனவும், திட்டக்குடி பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தீர்மான எண்.420 நாள்.27.08.2021–ன்படி திட்டக்குடி பேரூராட்சியால் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**(iv) கடலூர் மாவட்டம் – வடலூர் பேரூராட்சி**

வடலூர் பேரூராட்சியின் மொத்த பரப்பளவு 19.93 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 39,514 ஆகும். மேலும், இப்பேரூராட்சியின் 2018–2019, 2019–2020, 2020–2021 ஆகிய மூன்று வருடங்களுக்கான ஆண்டு சராசரி வருமானம் ரூ.846.43 இலட்சம் ஆகும். பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக இப்பேரூராட்சியுடன் மருவாய், கருங்குழி, கொளக்குடி மற்றும் நைனார்குப்பம் ஆகிய 4 ஊராட்சிகளை உத்தேசமாக இணைத்து வடலூர் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தீர்மான எண்.508 நாள்.27.08.2021ன்படி வடலூர் பேரூராட்சியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(v) தஞ்சாவூர் மாவட்டம் – அதிராம்பட்டினம் பேரூராட்சி**

அதிராம்பட்டினம் பேரூராட்சியின் மொத்த பரப்பளவு 12.80 சதுர கிலோ மீட்டர் ஆகும். இப்பேரூராட்சியின் மொத்த மக்கள் தொகை 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 31,066 ஆகும். தற்போதைய தோராய மக்கள் தொகை சுமார் 34,171 ஆகும். இப்பேரூராட்சி நகர்ப்புரத்தன்மை கொண்டுள்ளதால், நகர்புரத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்புகளை ஏற்படுத்த ஏதுவாக அதிராம்பட்டினம் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு மன்றத் தீர்மானம் எண் 415 நாள் 27.08.2021 ன்படி அதிராம்பட்டினம் பேரூராட்சியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(vi) தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் பேரூராட்சி**

திருச்செந்தூர் பேரூராட்சி 10.5 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. 2001ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 29,330 ஆகும். 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 32,171 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 35,171 ஆக உள்ளது. மேலும், இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20 மற்றும் 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான ஆண்டு சராசரி வருமானம் ரூ.1018.44 இலட்சம் ஆகும். மேலும், திருச்செந்தூர் பேரூராட்சி பகுதியில் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோவில் அமைந்துள்ளது. மேலும், மேற்படி திருக்கோவிலில் அரசால் அறிவிக்கப்பட்ட நான்கு முக்கிய திருவிழாக்களான மாசித் திருவிழா, வைகாசி விசாகம், ஆவணித் திருவிழா மற்றும் கந்தசஷ்டி திருவிழாக்கள் நடைபெறுகிறது. மேற்படி திருவிழா காலங்களில் யாத்ரீகர்கள் நாள் ஒன்றுக்கு 1,00,000 முதல் 2,00,000 வரை வந்து செல்லும் சுற்றுலா மையமாகவும், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம் பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் திருச்செந்தூர் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தீர்மான எண்.522 நாள் 27.08.2021ன்படி தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(vii) கோயம்புத்தூர் மாவட்டம் – கருமத்தம்பட்டி பேரூராட்சி**

கோயம்புத்துரர் மாவட்டம், கருமத்தம்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி 27 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 35,062 ஆகும், தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 45,286 ஆக உள்ளது. மேலும்,

இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20, 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி வருமானம் ரூ.15.08 கோடி ஆகும். எனவே, கருமத்தம்பட்டி பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம் பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் கருமத்தம்பட்டி பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.87/2021 நாள்.27.08.2021–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(viii) கோயம்புத்தூர் மாவட்டம் – காரமடை பேரூராட்சி**

கோயம்புத்துரர் மாவட்டம், காரமடை தேர்வுநிலை பேரூராட்சி 19.827 ச.கி.மீ. பரப்பளவில் 18 வார்டுகளை உள்ளடக்கியது எனவும், 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 35,166 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 43,521 ஆக உள்ளது. மேலும், இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20, 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி ஆண்டு வருமானம் ரூ.14.37 கோடி உள்ளதாகவும், எனவே, காரமடை பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் காரமடை பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.52 நாள்.27.08.2021–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(lx) கோயம்புத்தூர் மாவட்டம் – கூடலூர் பேரூராட்சி**

கோயம்புத்துரர் மாவட்டம், கூடலூர் சிறப்பு நிலை பேரூராட்சி 29.980 ச.கி.மீ. பரப்பளவில் 18 வார்டுகளை உள்ளடக்கியது எனவும், 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 38,859 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 65,753 ஆக உள்ளது. மேலும், இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20, 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி ஆண்டு வருமானம் ரூ.14.10 கோடி ஆக உள்ளதாகவும், எனவே, கூடலூர் பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம் பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் கூடலூர் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.33/2021 நாள்.27.08.2021–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(x) கோயம்புத்தூர் மாவட்டம் – மதுக்கரை பேரூராட்சி**

கோயம்புத்துரர் மாவட்டம், மதுக்கரை சிறப்பு நிலை பேரூராட்சி 21.470 ச.கி.மீ. பரப்பளவில் 18 வார்டுகளை உள்ளடக்கியது எனவும், 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 30,357 ஆகும், தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 34,401 ஆக உள்ளது. மேலும், இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20, 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி ஆண்டு வருமானம் ரூ.10.57 கோடி ஆக உள்ளதாகவும், எனவே, மதுக்கரை பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் மதுக்கரை பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.59/2021 நாள்.27.08.2021ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(xi) கரூர் மாவட்டம் – பள்ளப்பட்டி பேரூராட்சி**

கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி 10.63 ச.கி.மீ. பரப்பளவில் உள்ளது எனவும், 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 30,624 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 36,884 ஆக உள்ளது. மேலும், இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20 மற்றும் 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி ஆண்டு வருமானம் ரூ.774.62 இலட்சமாக உள்ளதாகவும், எனவே, பள்ளப்பட்டி பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் பள்ளப்பட்டி பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தனி அலுவலர் தீர்மான எண்.229/2021 நாள்.27.08.2021–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**(xii) திருப்பூர் மாவட்டம் – திருமுருகன்பூண்டி பேரூராட்சி**

திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி சிறப்பு நிலை பேரூராட்சி 14.50 ச.கி.மீ. பரப்பளவில் உள்ளது எனவும், 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 31,528 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 36,826 ஆக உள்ளது. மேலும், இப்பேரூராட்சியின் 2018–19, 2019–20 மற்றும் 2020–21 ஆகிய கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி ஆண்டு வருமானம் ரூ.11.41 கோடி ஆக உள்ளதாகவும், எனவே, திருமுருகன்பூண்டி பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் திருமுருகன்பூண்டி சிறப்புநிலை பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.60/2021 நாள்.27.08.2021–ல் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களின் செயற்குறிப்பின் அடிப்படையிலான நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, கீழ்காணும் 12 பேரூராட்சிகளை அவற்றின் தற்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி நகராட்சிகளாக அமைத்துருவாக்குவது என உத்தேச முடிவு மேற்கொண்டு அவ்வாறே ஆணையிடுகிறது.

| மாவட்டம் | பேரூராட்சி |
|---|---|
| திருவள்ளூர் மாவட்டம் | திருநின்றவூர், பொன்னேரி |
| கடலூர் மாவட்டம் | திட்டக்குடி, வடலூர் |
| தஞ்சாவூர் மாவட்டம் | அதிராம்பட்டினம் |
| தூத்துக்குடி மாவட்டம் | திருச்செந்தூர் |
| கோயம்புத்தூர் மாவட்டம் | கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர், மதுக்கரை |
| கரூர் மாவட்டம் | பள்ளப்பட்டி |
| திருப்பூர் மாவட்டம் | திருமுருகன்பூண்டி |

6. இதனடிப்படையில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், (a) எனும் கூறின் கீழ், இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான

அறிவிக்கைகள் (ஆங்கிலத்தில்), 14.10.2021–ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**7.** மேலும், திருவள்ளூர் மாவட்டம்–திருநின்றவூர் மற்றும் பொன்னேரி மற்றும் கடலூர் மாவட்டம் வடலூர் ஆகிய உத்தேச நகராட்சிகளுடன் அருகில் அமைந்துள்ள ஊராட்சிகளை இணைப்பது தொடர்பான மேல்நடவடிக்கைகள் பின்னர் தனியே மேற்கொள்ளப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:–**
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–01
நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை–28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம்.
தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்,
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 09
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (~~நநா.6,~~ ந.நி.5, பேரூ.2 மற்றும் அ.ந.2) துறை, சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

14/10/21

**பிரிவு அலுவலர்**

Endtt, 20782/2021/MCA1 date: 14.10.21

G.O. Communicated for taking necessary action

Director of Municipal Administration 14/10/21

To:–
The RDMA's / Chengalpattu / Thanjavur / Madurai / Tiruppur / Salem / Tirunelveli

©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 484] CHENNAI, THURSDAY, OCTOBER 14, 2021
Purattasi 28, Pilava, Thiruvalluvar Aandu-2052

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a Section of the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY DEPARTMENT

**திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி, திருநின்றவூர், கடலூர் மாவட்டம் - திட்டக்குடி, வடலூர், தஞ்சாவூர் மாவட்டம் - அதிராம்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம் - திருச்செந்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் - கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர், மதுக்கரை, கரூர் மாவட்டம் - பள்ளப்பட்டி மற்றும் திருப்பூர் மாவட்டம் - திருமுருகன்பூண்டி ஆகிய 12 பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்குதல் பற்றிய அறிவிக்கை.**

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-1)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Ponneri Town Panchayat as Ponneri Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – II.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-2)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Thirunindravur Town Panchayat as Thirunindravur Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – III.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-3)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Tittakudi Town Panchayat as Tittakudi Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – IV.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-4)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Vadalur Town Panchayat as Vadalur Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – V.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-5)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Adirampattinam Town Panchayat as Adirampattinam Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – VI.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-6)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Tiruchendur Town Panchayat as Tiruchendur Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – VII.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-7)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Karumathampatti Town Panchayat as Karumathampatti Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – VIII.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-8)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Karamadai Town Panchayat as Karamadai Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – IX.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

No. II(2)/MAWS/707(e-9)/2021.

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Gudalur Town Panchayat as Gudalur Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – X.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-10)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Madukkarai Town Panchayat as Madukkarai Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – XI.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-11)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Pallapatti Town Panchayat as Pallapatti Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

NOTIFICATION – XII.

*[அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, 14 அக்டோபர் 2021, புரட்டாசி 28, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052.]*

**No. II(2)/MAWS/707(e-12)/2021.**

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire area comprised in the local authority of Thirumuruganpoondi Town Panchayat as Thirumuruganpoondi Municipality.

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area, who desires to object the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009.

SHIV DAS MEENA,
*Additional Chief Secretary to Government.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU